දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832
ලේකම් / செயலாளர் / Secretary } 2784811
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50
Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
இசுருபாய ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/09/01/14/04

දිනය / திகதி / Date } 2012-07-31

சுற்றுநிருப இல- 2012/23

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ∴
உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

**மஹிந்த சிந்தன நோக்கிற்கமைய எதிர்கால இலங்கையை அறிவின் கேந்திரமாக்கும் அபிவிருத்தி நோக்கை அடைவதற்கு ஆரம்ப பாடசாலைகள் ஐயாயிரம் மற்றும் இடைநிலைப் பாடசாலைகள் ஆயிரம் என்பவற்றை மீளக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்திக்கான மாதமாகப் பிரகடனப்படுத்தல் (2012.08.03 - 2012.09.03)**

வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடியவாறு பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்காக வலுவான அடிப்படையை ஏற்படுத்துதல் ஆரம்பக்கல்வியின் பிரதான இலக்காகும். அவ் இலக்கை அடைவதற்காக 1000 இடைநிலைப்பாடசாலைகளுக்குச் சமமாக அபிவிருத்தி செய்யப்படும் ஆரம்பப்பாடசாலைகள் தொகுதியைச் §சிறுவர் நேயப் பாடசாலைகளாக§ அபிவிருத்தி செய்வதற்கு 6 பரிமாணங்களை உள்ளடக்கியதான முறைமை இனங்காணப்பட்டுள்ளது. §சிறுவர் நேயப் பாடசாலை'¶ வேலைத்திட்டத்தின் பிரதான அடிப்படையாக மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான, சுகாதாரமான, பாதுகாப்பான பாடசாலைச் சூழலை உருவாக்குதல் அவசியமாகும். அதற்கான முதலாவது ஏற்பாடாக இப்பாடசாலைகளில் பௌதீக வளங்கள் மற்றும் ஏனைய வசதிகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதான அனுசரணையுடன் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வேலைத்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்காக 2012.08.03 தொடக்கம் 2012.09.03 வரையான காலத்தை **ஆரம்பப்பாடசாலைகள் அபிவிருத்திக்கான மாதமாகப** பிரகடனப்படுத்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இக்காலத்திற்குள் இப்பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படை அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட எதிர்பார்க்கப்படுகிறது. அதிபரின் முழுமையான

அர்ப்பணிப்புடனும், அனைத்து வளவாளர்களுடைய முழுமையான சமூகமளித்தலுடனும் இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்குச் செயற்படுதல் வேண்டும்.

இந்த வகையில் நாட்டின் அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாக1683 ஆரம்பப் பாடசாலைகளினதும் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் 2012.08.03ம் திகதி ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பங்களிப்பாளர்களினதும் முழுமையான ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2 இதன்படி பாடசாலையில் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்றிட்டங்கள்:-

- மின்சார வசதிகள் வழங்குதல்
- குடிநீர் வசதிகள் வழங்குதல்
- மலசலகூடம் மற்றும் சுகாதார வசதிகளை விருத்தி செய்தல்
- பாடசாலை வேலி மற்றும் கேற் அமைத்தல்
- தற்போது உள்ள கட்டிடங்களைத் திருத்துதல், வர்ணம் ”சுதல்
- பாடசாலைப் பெயர்ப்பலகை தயாரித்தல்
- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காகச் செயற்பாட்டு அறையை முறையாக அமைத்தல்
- விளையாட்டு முற்றத்தைச் சரியான முறையில் அமைத்தல்
- பாடசாலை வளவினை மாதிரி வீட்டுத்தோட்டமாக அமைத்தல்
- ஆசிரியர்கள் தற்போது தங்கியிருக்கும் ஆசிரியர் விடுதி இருப்பின் அதற்கு அவசியமான திருத்த வேலைகளை மட்டும் செய்தல்

பாடசாலைகளில் மேற்குறித்த வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டிருப்பின் இதற்கு மேலாக இப்பாடசாலைக்குத் தேவையென இனங்காணப்பட்ட வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

3. 2012ம் வருடத்தின் இரண்டாந்தவணை நிறைவுபெறும் 20123.08.03ம் திகதி அதிபர் தமது ஆசிரியர்களுடன் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் பாடசாலைக்கு அழைத்து இவ் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக அறிவுறுத்தல் வேண்டும். இம்மாதத்திற்குள் இவ்வேலைத்திட்டத்தை அமுற்படுத்தும் உத்தேச திட்டம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இக்காலப்பகுதிக்குள் இக் கடமைகளை நிறைவு செய்வதில் தாங்கள் மிக்க கவனம் செலுத்தவேண்டும்.

4. கல்வி அமைச்சு, மாகாணக்கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களும் இவ்வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்ளல் வேண்டும்.மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் பிரதேசச் செயலாளர் இவ் வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்வார்.

5. ஆரம்பப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தவேண்டிய **சிறுவர்நேயப் பாடசாலை** முறைமை தொடர்பாக மாகாண மற்றும் வலயக் கல்விக் காரியாலயங்களில் ஆரம்பக்கல்வி மற்றும் சுகாதார விருத்திக்குப் பொறுப்பான அனைத்துப் பிரதி - உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் அறிட்டஞ்செய்யும்

வேலைத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி செய்வது தொடர்பாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுடன் இணைந்து விடுமுறை காலத்தினுள் பாடசாலையைத் திறந்து வைத்து இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களை அப் பாடசாலை வேலைகளில் ஈடுபடுத்தல் வேண்டும். அதற்காக அவர்களுக்குப் பாடசாலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அப்பாடசாலைகளுக்கு வகைகூறவேண்டியமை தொடர்பாகவுமஅவர்களுக்குப் பணிக்கப்படவேண்டும். பாடசாலைகளில் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அவர்களுடைய முழுமையான பங்களிப்பைத் தரவேண்டியது கட்டாயமானதாகும்.

6. உரிய தொகுதியின் பிரதேசச் செயலாளரால் இப்பபாடசாலையின் அபிவிருத்திவேலைகள் தொடர்பாக ஈடுபடுத்தப்படும் வெவ்வேறு பங்களிப்பாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அதிபரால் செய்யப்படல் வேண்டும். இலங்கையில் பாடசாலைப் பிள்ளைகளுக்காக முழுமையான ஆரம்பக்கல்வி உறுதிப்படுத்தப்படுதலின் முதற்கட்டமாகத் தேசிய நியமங்களுக்கு ஏற்ப வசதிகள் குறைந்த ஆரம்பப் பாடசாலைகளின் தொகுதியொன்றை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத்திட்டம் வெற்றியடைவதற்குத் தமது பாடசாலை ஆசிரியர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்துடன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுவது அதிபரின் பொறுப்பாகும்.

மேலும் தேவையான வழிகாட்டுதலுக்காக மேலதிகச் செயலாளர் (பொருளதார அபிவிருத்தி அமைச்சு)தொலை பேசி இல 0714443038 திருமதி சந்தரரா விக்கிரமசிங்ஹ அவர்களுடனும், மேலதிகச் செயலாளர் (கல்வி அமைச்சு) திருஎஸ்.யு.விஜேரத்ன (0779633322) அவர்களுடனும் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டு அலகு இலக்கம் 1988 ற்கு அழைத்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குத் தாங்கள் காட்டும் ஒத்துழைப்பை உயர்வாக மதிக்கிறேன்

எஸ்.எம். கோதாபய ஜயரத்ன
கல்விச் செயலாளர்

பிரதிகள்:-

1. சந்த்ரா விக்கிரமசிங்ஹ - மேலதிகச் செயலாளர் -பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அ.கொ
2. எஸ்.யு.விஜேரத்ன - மேலதிகச் செயலாளர் - கல்வி அமைச்சு அ.கொ
3. கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக் கல்வி - அறிந்து கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும்